## உடுவில கிராம சபை

# நிருவாக வரலாற்று மலர்

[1964ஆம் ஆண்டு தொடக்கம் 1967ஆம் ஆண்டு முடிய]

சேவையே எமது குறிக்கோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் கிராம சபை

பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்
வரவுப் பதிவு எண்
வகுப்பு எண்

# நிருவாக வரலாற்று மலர்

[1964ஆம் ஆண்டு தொடக்கம் 1967ஆம் ஆண்டு முடிய]

சேவையே எமது குறிக்கோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

**ஆசிச் செய்தி**

கௌரவ உள்ளூராட்சி அமைச்சர்
**திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. அவர்கள்** ... iii

உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்
**திரு. வி. தர்மலிங்கம் அவர்கள்** ... ... iv

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
**திரு. சு. முருகவேள் அவர்கள்** ... ... v

**அறிக்கை**

உடுவில் கிராம சபை அக்கிராசனர்
**திரு. ச. முத்துலிங்கம் அவர்கள்** ... ... vi

உடுவில் கிராமசபைக் காரியதரிசி
**திரு. ந. வி. சரவணமுத்து அவர்கள்** ... vii

1964ஆம் ஆண்டு தொடக்கம் 1967ஆம் ஆண்டு முடியவுள்ள
நிருவாக வரலாற்று அறிக்கை ... ... 1

உள்ளூராட்சி அமைச்சர் **கௌரவ திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. அவர்களுக்கு**
உடுவில் கிராமசபை அளித்த வரவேற்பு வாழ்த்துரை ... 17

இலங்கைப் பிரதம அமைச்சர் **உயர்திரு டட்லி சேனநாயக்கா அவர்களுக்கு**
உடுவில் கிராமசபை அளித்த உபசாரப்பத்திரம் ... ... 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. மு. திருச்செல்வம், கியூ. சி. அவர்கள்**
*கௌரவ உள்ளூராட்சி அமைச்சர்*

உள்ளூராட்சி அமைச்சு,
ஹேமாஸ் கட்டடம்,
கொழும்பு - 1.
4-3-1968.

உடுவில் கிராம சபை நிர்வாக அறிக்கை மலர் ஒன்றினை வெளியிடுவதையறிந்து மிக மகிழ்ச்சியடைகிறேன்.

சென்ற நான்கு வருடங்களில் இச்சபை புரிந்துள்ள சாதனைகளை விபரிக்கும் இம்மலர் மற்றைய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒரு முன்னோடியாக விளங்குமென எதிர்பார்க்கிறேன்.

நிர்வாக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கக்கூடிய இம்முயற்சியை மேற்கொண்டதற்காக உடுவில் கிராம சபையை நான் பாராட்டுவதுடன் இம்மலர் பல்வகைகளிலும் சிறப்புற்று வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

*மு. திருச்செல்வம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்களுடைய நிர்வாக அறிக்கை மலருக்குச் செய்தி ஒன்று விடுப்பதில் நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

இருபது ஆண்டுகளாக உடுவில் கிராம சபையில் அங்கத்தவனாகவும் அதில் சில ஆண்டுகள் தலைவராகவும் கடமையாற்றிய யான் உங்களுடைய நிர்வாகத்தின் சிறப்பைப் பார்க்கும்பொழுது பாராட்டாமலிருப்பின் நான் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன்.

நிர்வாகச் சிறப்புமட்டுமல்ல, மக்களுக்கு சமூகரீதியாகவும், கலைகலாச்சார ரீதியாகவும் உங்கள் சபை எத்தனையோ விதத்திற் சிறந்த தொண்டாற்றி வந்திருப்பது கண்டு உள்ளம் பூரிப்படைகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு திறந்த வெளிஅரங்கை அமைத்தமைபற்றிக் கூறாதிருக்க முடியாது. எங்கள் கலைவளர்ச்சிக்குச் செய்த தொண்டிற்கு இந்தத் திறந்த வெளிஅரங்கு உடுவில் கிராம சபை இருக்கும்வரைக்கும் ஓர் அழியாத சின்னமாக விளங்கும்.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் உங்களுடைய சிறந்த நிர்வாகத்திற்கும் நீங்கள் செய்த அரும்பெருந் தொண்டுகளுக்கும் பொறுப்பாக இருந்த கிராம சபை ஊழியர்களையும், அங்கத்தவர்களையும், சிறப்பாகத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் அவர்களையும் மனமாரப் பாராட்டுவதுடன். உங்கள் பணி தொடர்ந்து இருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

*வி. தர்மலிங்கம்*
*பா. உ., உடுவில்*

*'காமதேனு'*
*கந்தரோடை, சுன்னாகம்*
*6–3–1968*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. சு. முருகவேள் அவர்கள்**
*யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்*

*உள்ளூராட்சி அமைச்சு,*
*யாழ்ப்பாண அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*8-3-68.*

உடுவில் கிராம சபை 1964ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்துள் செய்த சேவைபற்றிய நிருவாக அறிக்கைக்கு ஒரு நல்லாசிச் செய்தி கொடுக்குமாறு என்னை நாடிய சந்தர்ப்பத்தில் எனது அவதானக் குறிப்பைக் கொடுப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கிராமசபை அதன் வரியிறுப்பாளருக்குக் கொடுக்கக்கூடிய ஆகக்கூடிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் மிக உற்சாகமும் உறுதியும் பூண்டுள்ளதை நானறிந்ததும் என் உள்ளத்தில் மகிழ்ச்சி பிரவாகிக்கின்றது.

இச்சபை குறிப்பிட்ட காலத்துள் கையாண்ட அபிவிருத்தித் திட்டங்களுள் புதிய வீதியமைப்புக்கள், மின்சார விஸ்தரிப்புத் திட்டம், ஆயுள்வேத வைத்தியசாலை ஸ்தாபிதம், சுகாதார வசதிகள் சீர்படுத்துதல், வாசிகசாலை வசதி, திறந்த வெளி அரங்கு ஸ்தாபிதம் என்பவை உள்ளடங்குவதுடன் ஏனைய பலவும் இடம் பெறுகின்றன.

பொதுமக்களுக்கு இச்சபை உறுப்பினர் செய்த அரியசேவைகள் பற்றிய விபரங்களடங்கிய இவ்வறிக்கை எல்லோருக்கும் நற்சேவையை எடுத்துரைக்கும். இவர்கட்கு இப்பகுதி வரியிறுப்பாளரின் ஆதரவும் அபிமானமும் கிடைத்து வருகின்றதென்பதும் எனது நம்பிக்கையாகும்.


இச்சபையினர் தமது பகுதி மக்கட்கு மனமுவந்தாற்றும் நற்சேவைக்கு எனது மனமார்ந்த நல்லாசி உரித்தாகுக.

*சு. முருகவேள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உடுவில் கிராம சபை 1964ஆம் ஆண்டு தொடக்கம் 1967ஆம் ஆண்டு முடியவுள்ள கால எல்லைக்குள் தனது நிர்வாகத்தை எவ்விதம் நிர்வகித்துள்ளது என்பதனைப் பொதுமக்களுக்கு அறியப்படுத்தும் நோக்கத்துடன் ஓர் அறிக்கையை வெளியிடும்படி கடந்த 27-12-67ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இச் சபை ஒரு பொதுத்தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில் விடப்படும் இவ்வறிக்கை பற்றிப் பொதுமக்கள் தம் மனத்திடை எத்தகைய அபிப்பிராயம் கொள்ளினும் சபையின் கோரிக்கைக்குத் தலைபணியும் நிலைமையில் நான் இருத்தலின் சொல்லப்பட்ட அறிக்கையை விதந்துரைத்தல் எதுவும் இன்றி உள்ள உள்ளவாறு வெளியிடக் கடமைப்பட்டுள்ளேன்.



திரு. ச. முத்துலிங்கம் அவர்கள்
*உடுவில் கிராமசபை அக்கிராசனர்*

எமது உடுவில் கிராம சபையின் பெரும் வருமானத்தை ஈட்டி வந்த பகுதிகள் 1964ஆம் ஆண்டில் பிரிந்து ஒரு பட்டின சபையின் அந்தஸ்தைப் பெற்றுத் தனிப்பட்ட உள்ளூராட்சிச் சபையாக இயங்கிவருவது நீங்கள் சகலரும் நன்கு அறிந்ததே.

எமது நிர்வாகத்தின்கீழ் 1964ஆம் ஆண்டில் விடப்பட்ட பிரதேசம் மிகமிகப் பின்தங்கிய கிராமங்களேயாகும். அத்துடன் பொருளாதார நிலையில் மிகக் குறைந்த வருமானத்தைப் பெறும் பகுதியுமாகும். இந்த நிலைமையில் இச்சபையின் நிர்வாகப் பொறுப்பைக் கையேற்ற நாம் எமது நிர்வாகத்தை எவ்வாறு நிர்வகித்தோம் என்பதனைப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் அறியவேண்டியது அவசியமே எனச் சபை கருதியது நியாயமேயாகும்

ஓர் உள்ளூராட்சிச் சபை தனது நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பும் அதேவேளையில் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பும் அத்தியாவசியகம் வேண்டப்படும் இரு முக்கியமான அம்சங்களாகும்.

கடந்த நான்கு வருடங்களாகப் பொதுமக்களாகிய நீங்கள் எம்மீது சுமத்திய பொறுப்பை, 'குருவிக்குத்தக்க ராகசுரம்' என்பதற்கமைய, நாம் எமது திறமைக்கேற்ற அளவில் எவ்வாறு நிர்வகித்துள்ளோம் என்பதனை வெளியிடுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

எமது கிராம சபைப் பிரதேசத்தை முன்னேற்றவழியில் இட்டு நிர்வகிக்கத் தகுந்த சபையைக் காலாகாலங்களில் அமைத்து நாட்டிற்குச் சுபீட்சத்தையும் மக்களுக்கு நல்வாழ்வையும் ஏற்படுத்த வழிவகுக்கும்படி பொதுமக்கள் அனைவரையும் வேண்டிநிற்கின்றேன்.


**ச. முத்துலிங்கம்**
*அக்கிராசனர், உடுவில் கிராம சபை.*

*சுன்னாகம், 1-3-1968.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் கிராம சபை தனது கடந்த நான்காண்டு நிர்வாக மலர் ஒன்றினை அச்சிட்டு வெளியிடும் இவ்வேளையில் இச்சபையின் நல்ல நிர்வாகத்துக்கு வழி கோலிய ஏதுக்களும் காரணங்களும் எவையெவை என்பதுபற்றி ஒருசில வார்த்தைகள் கூறிவைப்பது மிகமிகப் பொருத்தமானதாகும்.



திரு. ந. வி. சரவணமுத்து அவர்கள்
*காரியதரிசி, உடுவில் கிராமசபை*

இச்சபையின் காரியதரிசி என்ற ரீதியில் இச்சபையில் எனக்குரித்தாய சேவைகால வயது ஓர் ஆண்டு காலமேயாதலின் எனது சேவைக்கு அப்பாற்பட்ட காலத்தில் இச்சபையின் நிர்வாகத்தைப் பற்றி ஏதாவது விரித்துக் கூறுவதற்கு நான் அருகதை அற்றவனுவேன். எனினும் இச்சபையின் பரிபாலனத்தின் கீழ் இருந்துவரும் பல பதிவேடுகளைப் புரட்டிப் பார்க்கும்பொழுது இச்சபை ஆரம்பகால முதற்கொண்டே தனது பகுதி மக்களுக்குப் பல துறைகளிலும் வியத்தகு சேவை புரிந்துள்ளது எனக் காண முடிகின்றது.

பொருளாதார ரீதியில் தரம்பிரிக்கப்பட்ட பொழுது இச்சபை இலங்கையில் உள்ள கிராம சபைகளில் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியிருந்தது என்பது அரசாங்கத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்ட 1947ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சேவைச் சபை சம்பளத்திட்டத்தின் புறக்குறிப்பில் இருந்து நிரூபணமாகின்றது. இதனுல் இக்கிராம சபை பொருளாதார வளர்ச்சியில் வடமாநிலத்தில் முதல் இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தமை யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த ஒரு தனிக் கௌரவமே எனக் கொள்வது சிறிதும் மிகையாகாது.

ஓர் உள்ளூராட்சிச் சபை அதன் நிர்வாகத்தைத் திறம்பட நடப்பிப்பதற்கு முதற்கண் வேண்டப்படுவது தன்னலத்தைக் கனவிலும் சிந்தியாத பரோபகார சிந்தையும் பொதுஜன சேவைப் பணியில் ஆர்வமுங் ஊக்கமும் உள்ளவர்களாக அச்சபையின் அக்கிராசனர்கள் அமைதலேயாகும். இச்சபையின் கடந்தகால அக்கிராசனர் வரிசையில் இடம்பெற்றவர்களான திருவாளர்கள்: சி. கந்தையா உபாத்தியார், ந. க. அம்பலவாணர், நா. கந்தையா, சி. மாணிக்கம், வி தருமலிங்கம் (தற்போதைய உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்) ஆகியோர் மேற்காட்டியபடியான தகுதிவாய்ந்தவர்களாக அமைந்தமையினுலேயே இக்கிராம சபை தனது நிர்வாகத் திறமையிற் சிறந்துவிளங்கும் வாய்ப்பைப்பெற்றது அத்தகையோர் வரிசையிலேயே கடந்த ஐந்து ஆண்டுகளாக அக்கிராசனர் பதவியை வகித்துவரும் திருவாளர் ச. முத்துலிங்கம் அவர்களும் சமத்துவமாக வைத்து எண்ணக்கூடிய தகுதிவாய்ந்தவராகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக, இச்சபையின் நிர்வாக உத்தியோகத்தர்களாக (இலிகிதர்களாக) மிக்க திறமையும் ஆற்றலும் உடையவர்கள் கடந்த காலங்களிற் பணிபுரிந்திருத்தலின் அவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய இச்சபையின் நிர்வாகம் வழிநடத்தப்பட்டமையினாலேயே இச்சபை தனது பொருளாதாரத்தில் தன்னிறைவை அதன் ஆரம்பகாலம் முதற்கொண்டே பெற்றுக்கொண்டது. இத்தகைய திறன்மிகு நிர்வாக உத்தியோகத்தர்கள் வரிசையில் திருவாளர்கள்: எஸ். நாகரத்தினம் (இளைப்பாறிய கணக்குப் பரிசோதக பிரதி அதிபர்) வீ. சீ. சண்முகம் (உள்ளூராட்சி இலாகா கிராம சபை நுண் ஆய்வு உத்தியோகத்தர்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

நான் அவதானித்த அளவில் இக்கிராம சபை தனது கொள்கைகளையும், திட்டங்களையும் சபைக் கூட்டங்களில் நிறைவேற்றி வைக்கும் அளவோடு நின்றுவிட அக்கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்தும் பொறுப்பை நிர்வாக உத்தியோகத்தர்கள் சபையின் தலையீடு எதுவுமின்றி மேற்கொண்டுவந்துள்ளனர். அதனாலேயே இக்கிராம சபை தன் நிர்வாகத்தைச் சிறந்த முறையிற் கொண்டு நடத்தும் வாய்ப்பைப் பெற்றது.

உள்ளூராட்சிச் சபை நிர்வாகசேவைப் பணியில் ஈடுபட்ட எனது முப்பத்து மூவாண்டு காலத்தில் நான் சேவைசெய்துள்ள பத்துக் கிராம சபைகளிலும், சபையின் தலையீடு எதுவுமின்றி நிர்வாகத்தைச் சுமுகமாக நடத்தும் வாய்ப்பு இரு கிராம சபைகளிலேயே எனக்குக் கிடைத்தது. அதில் ஒன்று நீர்கொழும்பு மாவட்டத்தில் உள்ள தங்கொட்டுவா கிராம சபையும் மற்றது தற்போது சேவை புரிந்து வரும் உடுவில் கிராம சபையுமே எனக் குறிப்பிடுவது மகிழ்ச்சிக்குரியது.

நிர்வாகம் திறம்பட நடத்தக்கூடிய சாதனங்களும் வாய்ப்புகளும் நிறைய நிறைய அமையினும் நிர்வாக இயந்திரங்களான உத்தியோகத்தர்களின் திறன்மிகு வழிநடத்துதலிலேயே ஓர் உள்ளூராட்சிச் சபையின் நிர்வாகம் சிறந்து மிளிர்கின்றது என்பது எவரும் மறுக்கமுடியாத உண்மை.

இக்கிராம சபை தனது மக்களுக்குச் சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட சபைகளைக் காலாகாலங்களில் அமைத்து மேலும் தனது அந்தஸ்திலும் பொருளாதாரத்திலும் அபிவிருத்தியடைந்து விளங்கவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ந. வி. சரவணமுத்து**
*காரியதரிசி,*
*உடுவில் கிராம சபை.*

*உடுவில் கிராம சபை அலுவலகம்,*
*சுன்னாகம், **10-3-1968**.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ். தெற்கு சுன்னாகம்
வரவுப் பதிவு எண்
அருப்பு எண்

அருந்துங்கள் !

கை படாமல் நவீன விஞ்ஞான முறைப்படி
மின்சார மேஸ்ரரினால் தயாரிக்கப்பெற்ற

## "அண்ணா கோப்பி"

தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள்
போற்றிப் புகழ்ந்துவரும்

## "அண்ணா கோப்பி"

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும்
விற்பனையாகின்றது.

உங்கள் வாடிக்கைக் கடைகளில் சென்று

### "அண்ணா கோப்பி"

என்று கேட்டுப் பார்த்து வாங்கி உபயோகித்துப்
பயனடையுங்கள்.

தயாரிப்பாளர் :

## அண்ணா தொழிற்சாலை

### இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனமான செலவில் சிறப்பாக வாழ்வதற்கு

# இணுவில், ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

கே. கே. எஸ். வீதி :: இணுவில்.

★ விவசாயத்தைப் பெருக்கத் தேவையான பசளைகளும், கிருமி நாசினிகளும், இவற்றை உபயோகிப்பதற்குரிய தெளி கருவிகளும் எம்மிடம் இருக்கின்றன.

★ உண்ணவேண்டிய உணவுப் பொருள்கள்,

★ உடுக்கத் தேவையான துணி வகைகள்,

★ நாட்டின் பொருளாதாரத்தையும் சிக்கனத்தையும் உயர்த்துவதற்குத் தரமானதும் குறைந்த விலையிலுமான கைத்தறிப் புடைவை வகைகள்,

★ சிறந்த தொழிலாளர்களால் சிறப்பாகவும் தரமாகவும் செய்யப்படும் பாண், கேக், பிஸ்கோத்து முதலியனவும்,

★ பாடசாலை உபகரணங்கள் ஆதியனவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ எமது ஸ்தாபனம் நாட்டின் பொருளாதாரத்தையும், சிக்கன சேமிப்புத்திட்டத்தையும் மக்களிடையே பரப்புவதற்காகக் கிராமவங்கி ஒன்றையும் தொடங்கியுள்ளது. பணத்தைச் சேமிப்பில் போடுவோருக்கு 4% வட்டி கொடுக்கப்படும்.

## கூட்டுறவே நாட்டுயர்வு

என்பதனை அடிப்படையாகக்கொண்டு ஐந்து கிளை ஸ்தாபனங்களையும் உருவாக்கியுள்ளது.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இச்சபை அக்கிராசனர்கள், உப-அக்கிராசனர்கள் வரிசையில்**

**இடமிருந்து வலம்:** திரு. ச. முத்துலிங்கம், முன்னைநாள் உப அக்கிராசனரும், தற்போதைய அக்கிராசருனம்; திரு. க. க. அம்பலவாணர், திரு. வி. தருமலிங்கம், திரு. சி. மாணிக்கம், முன்னைநாள் அக்கிராசனர்கள்; ஆயுர்வேத வைத்திய கலாநிதி திரு. ஆ. நடராசா, முன்னைநாள் உப-அக்கிராசனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் கிராமசபை

# நிருவாக வரலாற்று மலர்

காலம் 1964ஆம் ஆண்டு தொடக்கம் 1967ஆம் ஆண்டு முடிய

1. கந்தோர் நிர்வாகம்:

1964ஆம் ஆண்டில் இச்சபையின் பெரும் வருமானம் தரும் பகுதி பிரிந்து சுன்னாகம் பட்டின சபையாக அமைந்தது. அதனால் இச்சபையின் முந்திய இருப்பு, பொறுப்பு, தேட்ட நிதி ஆதியன எமது சபைக்கும் சுன்னாகம் பட்டின சபைக்குமிடையே 3க்கு 8 என்ற விகிதாசாரத்தில் பிரிக்கப்பட்டது. இந்த நிர்வாக கைமாற்றத்தினால் எமது சபைக்குப் பொருளாதார வீழ்ச்சி ஏற்படவே மின்சார அத்தியட்சகர் பதவியும் இரு இலிகிதர்களின் பதவிகளும் அமுக்கப்பட்டன. 1964ஆம் ஆண்டுக்கு முன்னர் கந்தோர் நிர்வாகத்துக்கு வருடாவருடம் சுமார் ரூ. 25,000வரை செய்யப்பட்டுவந்த செலவுகள் கடந்த 4 வருடங்களிலும் வருடமொன்றுக்கு சுமார் ரூ. 18,000/-த்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முன்னைநாள் உடுவில் கிராம சபையின் சேவையிலிருந்து இளைப்பாறியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இச்சபை 1964ஆம் ஆண்டு தொடக்கம் வருடாவருடம் வழங்கிவந்த உபகாரச் சம்பளம் ரூ. 3400-96ஐ உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையோடு தொடர்புகொண்டு 3க்கு 8 என்ற விகிதாசாரத்தில் இச்சபைக்கும் சுன்னாகம் பட்டின சபைக்குமிடையே பங்கீடு செய்யத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனால் இச்சபை வருடமொன்றுக்கு ரூ. 2940-08ஐ தனது பொது நிதிச் செலவிலிருந்து ஆதாயம் கண்டுள்ளது.

1959ஆம் ஆண்டு தொடக்கம் இச்சபையின் சேவையிலிருந்து இச்சபையின் திறமைமிகு நிர்வாகத்துக்கு வழிகாட்டிய காரியதரிசி திரு. பொ. சபாபதிப்பிள்ளையும், இலிகிதர் திரு. ஆ. க. இராசதுரையும், ஓவசியர் திரு. எஸ். இராசகுலசிங்கமும், வேறு கிராமசபைகளுக்கு மாற்றம் பெற்றுச் சென்றனர். இவர்களது ஸ்தானங்களுக்கு முறையே திரு. ந. வி. சரவணமுத்து, திரு. நா. ஏ. பேராயிரம், திரு. ந. செல்வராசா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

2. போக்குவரத்துச் சேவை:

அ. இச்சபை தன் பொது நிதியிலிருந்து வருடாவருடம் சராசரி ரூ. 7620/- செலவிட்டுச் சபையின் 12 வட்டாரத்திலும் உள்ள ஒழுங்கைகளைச் செப்பனிட்டுள்ளது. ஒவ்வோர் வட்டாரத்துக்கும் வருடமொன்றுக்குச் சராசரி ரூ. 300/-க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கி, கல்லு முதலிய உபகரணங்களை ஒப்பந்தத்தில் போடுவித்து சபையின் சேவையிலுள்ள மூன்று தெருவேலைக்கூலிகளைக் கொண்டு பரவிச் செப்பனிட்டுள்ளது. சுருங்கக்கூறின் இச் சபை தன் வருமானத்துக்கு ஏற்ப பொதுநிதியிலிருந்து வருடமொன்றுக்கு ரூ. 7620/– வீதம் கடந்த நான்கு வருடங்களிலும் மொத்தம் ரூபா 30,480/–ஐ தெருக்கள், வீதிகள், ஒழுங்கைகள் பரிபாலனத்துக்குச் செலவிட்டிருக்கிறது.

ஆ. மேலும், இச்சபை கடந்த நான்கு வருடங்களிலும் இதனடியில் விபரம் தரப்பட்டுள்ள படி மொத்தமாக ரூ. 44561/-ஐ மத்திய அரசாங்கத்திடமிருந்து நன்கொடையாகப் பெற்று பொதுமக்களின் போக்குவரத்துக்கு மிக அத்தியாவசியமான ஒழுங்கைகளைத் தார் இட்ட தெருக்களாக அமைப்பித்துள்ளது.

1965

1. மல்வம் தெரு ½ மைல் 7911·50
2. தன்னை ஒழுங்கை ½ மைல் 3555-00

1966

1. நீயாம்பத்தைத்தெரு ¼ மைல் 2656-36
2. அமெரிக்கன் மிஷன் பாடசாலைத் தெரு ½ மைல் 4753-00
3. நந்தாவில் பாலம் 1740-00

1967

1. சிங்கத்தின் கலட்டித் தெரு ¼ மைல் 3987-00
2. துன்மலைத் தெரு ¼ மைல் 2687-00
3. பாலாவோடைத் தெரு ¼ மைல் 2771-00
4. மல்வம் தெரு, வன்னிய சிங்கம் வீதி. தாவடிப் பத்தானைத் தெரு, நீயாம் பத்தைத் தெரு, அமெரிக்கன் மிஷன் பாடசாலைத் தெரு ஆகிய ஐந்து தெருக்களையும் திருத்தி 2ஆம் முறை தார்போட 6000-00

குறிப்பு :

மேலே குறித்த நான்கு வேலைகளும் ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

1968

1. சிங்கத்தின் கலட்டித் தெரு 2550-00
2. பாலாவோடைத் தெரு 2550-00
3. துன்மலைத்தெரு 3400-00
4. தாவடிப் பாடசாலை ஒழுங்கை, நந்தாவில் ஒழுங்கை, பாப்பா தோட்ட ஒழுங்கை, வன்னிய சிங்கம் வீதி, சங்குவேலி துலுமினியாத்தோட்ட ஒழுங்கை, உருளைப் புல ஒழுங்கை ஆகியவைகட்கு வெள்ள நிவாரண நன்கொடையாக உத்தேசம் ரூ. 10,000/-க்கு உட்பட்ட தொகையை அரசாங்கம் கொடுக்க முன்வந்துள்ளது.

குறிப்பு :

மேலே சொல்லப்பட்ட வேலைகள் அனைத்துக்கும் உள்ளூராட்சித் தொழில்நுட்ப அதிகாரி மதிப்புத்திட்டம் தயாரித்து எமக்குக் கொடுத்ததும் ஒப்பந்தத்தில் விடப்படும்.

இ. மேலும் இணுவில் தெற்கு "சின்னத்துரை சகோதரர்கள்" ஸ்தாபனத்தின் உரிமைப்பங்காளர் திரு. சி. சின்னத்துரை அவர்களும் கொழும்பு "றெஸ்ரோறன்" ஸ்தாபன உரிமையாளர் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களும் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச்சபை நிர்வாகத்தின் கீழுள்ள மருதனாமடம் சந்தையின் ஒரு புறத்தோற்றம்.




இச்சபை அமைத்துள்ள திறந்த வெளி அரங்கை 23-3-67இல் கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் திறந்து வைத்த திறப்பு விழா வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தப்பணத்தில் ரூ 8060/-ஐ செலவு செய்து வன்னியசிங்கம் வீதிக்குக் கல்லிட்டுத் தார் போட்டு வீதி அமைத்து எம் மிடம் ஒப்படைத்துள்ளனர். நாம் இவ்வீதிக்கு ரூ. 1260/-ஐ மத்திய அரசாங்கத்திடம் இருந்து நன்கொடையாகப் பெற்று இரண்டாம்முறை தார் போடுவித்துள்ளோம்.

ஈ. இச்சபை யாழ் மாவட்ட இணைப்புக்குழுவை வேண்டிக் கொண்டதற்கு அமைய சங்குவேலி துலுமினியா தோட்ட ஒழுங்கையை மரா மத்து இலாகா பாரம் எடுத்து 1968/69 நிதிவருட ஒதுக் கீட்டின்கீழ் சீர்திருத்தம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

3. விவசாய அபிவிருத்தி சேவை:

1. ''அதிக உணவு பயிரிடுக'' என்ற சுலோகத்தை அரசாங்கம் இலங்கைத்தீவு எங்கணும் பரப்பி விவசாயத்தில் இலங்கை தன்னிறைவைப் பெற்று வெற்றி காண விவசாயிகட்குச் சகல ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் இவ் வேளையில் எமது கிராம சபையும் இச் சேவையில் விவசாயிகளை ஊக்குவதற்குத் தன்னாலான பணியைத் தனது பொருளாதாரத்துக்கு ஏற்பச் செய்துள்ளது என்பதனை இங்கு பெருமையுடன் கூறுதல் சிறிதும் மிகையாகாது. விவசாயிகள் தத் தம் பண்ணைகளுக்கு வேண்டிய உரம் மற்றும் விளை பொருட் களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் பிரதான விவசாயப் பகுதிகளுக்கு ஊடாகச் செல் லும் சிங்கத்தின் கலட்டித் தெரு, துன்மலைத் தெரு, பாலாவோடைத் தெரு ஆகிய மூன்று தெருக்களையும் ரூபா 9445/- செலவிட்டுத் தார்த் தெருக்களாக அமைப்பதற்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டும் வேண்டிய கல் முதலிய உபகரணங்கள் பறிக்கப்பட்டும் உள்ளன.

2. விவசாயிகள் தங்கள் பண்ணை களில் விளைவிக்கும் விளை பொருட் களை இலகுவில் விற்பனைசெய்வ தற்கு விவசாயப் பண்ணைகட்கு நடுவணுகவுள்ள மருதனார் மடத் தில் ஓர் சந்தையை அமைத்து மத்திய அரசாங்கத்திடமிருந்து ரூ 5768/- நன்கொடைபெற்று அரை நிரந்தரமான கட்டிடங் களையும் அமைத்துள்ளது. இத னால் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை அவ்வப்போது தேவைக்கேற்ற வகையில் விற்க வசதி செய்யப்பட்டுள்ளது. அதுவுமன்றி வியாபாரிகளிட மிருந்து பொருட்களாக வரி அறவிடும் முறை அறவே ரத்துச் செய்யப்பட்டு மிகக் குறைந்த வரியைப் பணமாகச் சபையே நேரில் அறவிட வசதிகளும் செய்துள்ளது.

3. இச்சந்தை மிக விசாலம் குறைந்த இடத்தில் அமைந் திருத்தலின் விவசாயிகளும் பொருட்களைக் கொள்வனவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோரும் மிகக் கஷ்டம் உறுகின்றனர். எனவே, இச் சந்தையை விஸ்தரித்து நவீன வசதிகளுடன் அமைப்பதற்கு ஏற்ற நடவடிக்கையாக அண்மையில் இருக்கும் 2½ பரப்பு நிலத்தை கட்டாயம் நிலம்வாங்கும் சட்டத்தின்கீழ் மாவட்ட அரசாங்க அதிபர் மூலம் வாங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளும் பூரணத்துவம் அடையும் தறுவாயில் இருக்கிறது. இந்த நில விஸ்தரிப்பு முடிவுற்றதும் நவீன வசதிகளுடன் கூடிய ஓர் சந்தையை அமைக்க வேண்டுமென்பதே இச் சபையின் நீண்ட நாள் அபிலாஷை. இப்பணியினை இச் சபை தனது காலத்துள் நிறைவேற்றுவது சாத்தியப்படாவிடின் பின் அமையப்போகும் சபை இப்பணியினைத் தொடர்ந்து நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டுள்ளது.

4. மேலும், விவசாயத்துறையில் கமக்காரருக்கு ஊக்கம் அளிப்பதற்காகச் சபை நிதியிலிருந்து பன்னிரண்டு மண்வெட்டிகளை வாங்கி ஒவ்வோர் வட்டாரத்திலும் அதிக உணவுப் பயிர்களை விளைவித்த பன்னிரண்டு கமக்காரருக்கு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மூலம் விவசாயப் பரிசுகளும் வழங்கியுள்ளது.

5. விவசாய அபிவிருத்திக்கு உதவும் வகையில் சங்குவேலி தாமரைக்குளத்தை ஆழமாக்க ரூ. 9000/-ஐ நன்கொடையாக உதவும்படி மத்திய அரசாங்கத்திடம் இச்சபை கோரியுள்ளது. இந் நன்கொடை கிடைக்கப்பெற்றதும் இவ்வேலை உடனடியாக மேற்கொள்ளப்படும்.

4. சுகாதார சேவை :


1. எமது நிர்வாகப் பிரதேசம் நகர நிர்மாண விஸ்தரிப்புச் சட்டத்தின்கீழ் பிரகடனம் செய்யப்படாதிருத்தலின் நகர விஸ்தரிப்புக்கு அமைந்த வகையில் இப்பகுதியில் கட்டப்படும் கட்டிடங்கள் சுகாதார வசதிகளைக் கொண்டனவாக அமைவதற்கு ஏற்ற ஆலோசனைகளை மக்கட்கு உதவமுடியாத நிலைமையில் இருத்தல் இச்சபைக்கு ஓர் பெரும் குறைபாடாகும். நகரமாக விரைவில் பரிணமிக்கக்கூடிய இச்சபைப் பிரதேசம் நகர விஸ்தரிப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனம் செய்யப்படுவது மிகமிக அத்தியாவசியமாகும். அன்றேல் காலக்கிரமத்தில் சேரிகள் அமைவது தவிர்க்கமுடியாததாகிவிடும். எனவே அமையப்போகும் சபை இவ் விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தக் கடமைப்பாடுள்ளது.

2. மக்களின் சுகாதாரத்தைப் பேணிக்காக்க இச்சபையின் பிரதான இடங்களிலுள்ள குப்பை கூளங்கள் கூட்டித் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. பகிரங்க தெருக்களிலும் இடங்களிலும் இறந்துகிடக்கும் மிருகங்களின் சடலங்கள் அவ்வப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச்சபை நிர்வாகத்தின் கீழுள்ள பொது நூல் நிலையத்தின் ஒரு புறத்தோற்றம்.



இச்சபை நிர்வாகத்தின் கீழுள்ள இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அடக்கம் செய்யப்பட்டு தொற்றுநோய்க் கிருமிகள் உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டு வரப்பட்டுள்ளது.

3. எமது சபையில் அரசாங்க சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின்கீழ் ஒரு தாய் சிசுநலம் பேணும் நிலையம் இயங்கி வருகின்றது. தாய்ப்பால் அற்ற சிசுக்களுக்கு மாதம் இருமுறையாக இலவச பால்மா விநியோகம் செய்யும் நிலையம் ஒன்றும் அமைந்து இயங்கி வருகின்றது. இச்சேவைக்கு வருடாவருடம் சராசரி ரூபா 1750/-வீதம் கடந்த நான்கு வருடங்களிலும் ஏறக்குறைய ரூபா 7013/41ஐ இச்சபை செலவிட்டுள்ளது.

4. வருடந்தோறும் சுகாதார வாரத்தை இச்சபை பிரதேசத்து மக்கள் அனைவருக்கும் பயன்படத்தக்கவகையில் நடாத்தி வந்துள்ளது.

5. வறிய மக்கள் நோயுற்ற காலை அவர்கள் இலவச வைத்திய சேவையைப் பெறக்கூடிய முறையில் ஓர் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையை மத்திய அரசாங்க அனுசரணையில் கடந்த பல வருடங்களாக நடாத்தி வருகின்றது. இச்சேவைக்குக் கடந்த நான்கு வருடங்களிலும் ஏறக்குறைய ரூபா 22,197–29 செலவிட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 16725/ஐ மத்திய அரசாங்கம் உதவி நிதியாகத் திருப்பிக் கொடுத்துள்ளது. இந்த வைத்திய உதவியைப்பொதுமக்கள் நன்குபயன்படுத்தாதிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. பொதுமக்கள் இந்த இலவச வைத்தியசாலைக்கு ஊக்கம் அளித்திருப்பரேல் படுக்கைகள் அமைந்த ஓர் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை எமது கிராமசபைப் பிரதேசத்தில் நிறுவக்கூடிய வாய்ப்புகள் இன்று கிடைத்திருக்கும் அல்லவா?

6. உடுவில் அரசினர் ஆங்கில வைத்தியசாலையை ஒரு படுக்கைகள் அமைந்த பிரசவ சிகிச்சை நிலையமாக அமைத்துத்தர வேண்டுமென்று இச்சபை ஒரு கோரிக்கை விடுத்துள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக முன்னைநாள் சுகாதார அமைச்சர் கௌரவ எம். டீ. ஏச். ஜெயவர்த்தனை அவர்களையும் சுகாதார இலாகா நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் அவர்களையும் இச்சபையின் தெரிவுக்குழுவொன்று பேட்டிக்ண்டபொழுதுஇச்சபையின் கோரிக்கை செயல்படத் தம்மால் ஆவன செய்வதாக இவ்விரு பிரமுகர்களும் உறுதி அளித்துள்ளனர்.

5. நீர் வசதியளித்தல்:

எமது கிராமசபைப் பிரதேசத்திலுள்ள உடுவில், இணுவில், தாவடி ஆகிய கிராமங்களில் ஒரு கிணறு வெட்டிக் கட்டுவதற்கு ஏறக்குறைய ரூபா 2500/வரை செலவாகும். கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம் இப்பகுதிகளில் நீர்மட்டம் மிக ஆழத்தில் இருப்பதும் கற்பார் நிறைந்த பூமியாக இருப்பதுமேயாகும். எனவே இக் கிராமங்களில் ஒரு கிணற் றைத் தமக்கென அமைத்துக் கொள்ள முடியாத மக்கள் நெருங்கி வாழும் இடங்களில் மத்திய அரசாங்க உதவி நன் கொடை ரூ. 6760/ஐப் பெற்று பற்றுக்குறைக்கு இச் சபைப் பொது நிதியிலிருந்தும் ரூபாய் 2692/ஐச் செலவிட்டு மூன்று கிணறுகளை இச்சபை கட்டு வித்து உள்ளது. இன்னும் ஒரு கிணறு ரூ. 2068/- செலவில் கட்டுவதற்குரிய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

6. இடுகாடுகள், சுடுகாடுகள் பரிபாலனம்:

இச்சேவைக்கு கடந்த நான்கு ஆண்டுகளிலும் சபைப் பொது நிதியிலிருந்து மொத்தமாக ரூ. 3197-85ஐ இச்சபை செல விட்டுள்ளது. ஆயின் சபைத் தெரு வேலைக் கூலியாட்கள் உதவியுடன் சபை எல்லைக்குள் இருக்கும் 3 சுடுகாடுகளும் ஒரு இடுகாடும் செவ்வனே பரிபா லிக்கப்பட்டு வந்துள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் ரூ. 2188/-ஐ தாவடி சுடலையில் ஓர் மடம் அமைப்புக்கு செலவிட்டுள்ளது. மேலும் மத்திய அரசாங்க நிதி யுதவி பெற்று மல்வம் இடு காட்டில் ஒரு கிணறும், தாவடிச் சுடுகாட்டில் ஒரு கிணறும் ரூபா 2831/20 செலவில் கட்டி முடிக் கப்பட்டுள்ளன. இச் சுடலை கட்டிச் சுற்றிவர வேலி இட்டு அறுக்கை செய்யப்பட்டிருந்தும் இவ்வேலிக் கம்பிகள் தேசாபி மானமற்ற புல்லர்கள் சிலரால் அபகரிக்கப்பட்டு இருப்பது இங்கு வருத்தத்துடன் குறிப் பிடத்தக்கது.

7. கைத்தொழில் சேவை:

அரசாங்கம் சிறு கைத்தொழில் களுக்கு ஊக்கம் அளிக்கும் வகை. யில் சமீப காலத்தில் ஒவ்வோர் பாராளுமன்றத் தொகுதிக்கும் 3 கைத்தறி நெசவு நிலையங்கள் நிறுவ முன்வந்தது. இம்மூன்று நிலையங்களில் 1 தாவடி இணுவில் கிராமங்களுக்குப் பொதுவாக ஒதுக்கப்பட் டுள்ளது. குறித்த நெசவு நிலையக் கட்டிட அமைப்புக்கு ரூ. 6000/- மாத்திரம் அர சாங்கம் ஒதுக்கீடு செய்திருந் தது. கட்டிட வேலைக்கு ஒப்பந் தங்கள் அழைக்கப்பட்டபோது அரசாங்கம் ஒதுக்கிய நிதியின் அளவைக்கொண்டு அரசாங் கத்தின் பரிமாணங்களுக்கு அமைய ஓர் கட்டிடத்தைக் கட்டி முடிப்பது சாத்திய மின்மையால் இக் கட்டிடத் துக்கு யாரும் ஒப்பந்தம் எடுக்க முன்வரவில்லை. இதனைக் கண் ணுற்ற இச்சபை தனது நிதியி லிருந்து ரூ. 1000/-ஐ நன் கொடையாக ஒதுக்கீடு செய்து ஓர் ஒப்பந்தக்காரனைக் கொண்டு சொல்லப்பட்ட நெசவுநிலையக் கட்டிடத்தை இணுவில் பிரம ஸ்ரீ நாகரத்தினக் குருக்கள் இராமநாதக்குருக்கள் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திறந்த வெளி அரங்குத் திறப்புவிழா வைபவத்தை அடுத்து நான்கு நாட்கள் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின்போது கலைஞர் திரு. ஏ. சுப்பையா அவர்களது மாணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம்.



மானிப்பாய் '' கலைக்கோயில் '' திருமதி லீலாம்பிகை செல்வராஜா அவர்களது மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்புச் செய்த காணியில் கட்டிமுடித்துக் குடிசைக் கைத்தொழில் இலாகாவுக்கு ஒப்படைத்துள்ளது.

8. கல்வி கலாச்சார சேவை :

அ. இச் சபையின் நிதியிலிருந்து வறிய மாணவர்கட்கு இலவசப் பாடப்புத்தக விநியோகம்செய்வதற்கு 1967ஆம் ஆண்டு நிதி வருடத்தில் ரூ. 750/- மாத்திரம் செலவிட்டுள்ளது. அடுத்த 1968ஆம் ஆண்டுக்கு இச் சேவைக்கு ரூ. 2500/- செலவிடப் பணம் ஒதுக்கீடு செய்து கௌரவ உள்ளூராட்சி மந்திரி அவர்களின் அங்கீகாரத்தையும் கோரியுள்ளது.

ஆ. தரமான புத்தகங்களை வாங்கி வாசித்து அறிவு விருத்திசெய்ய முடியாத நிலையிலுள்ள எமது கிராம மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் இச்சபை ஒரு பொதுநூல் நிலையத்தை 1967இல் ஸ்தாபித்துள்ளது. இந்நூல் நிலையத்துக்கு ஏறக்குறைய 1000/- ரூபா பெறுமதியான சகல துறை நூல்களையும் இச்சபைப் பிரதேசத்திலுள்ள பரோபகாரமிக்க கனவான்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர். இச்சபை தனது பொது நிதியிலிருந்து ரூபாய் 2011-24ஐயும் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ள நன்கொடை ரூ. 1622-50ஐயும் செலவிட்டு இலக்கியம், இலக்கணம், இதிகாசம், புராணம், சமயம், கணிதம், பொருளாதாரம், வைத்தியம், சோதிடம் ஆகிய பல துறைகளிலும் வெளியான தரமுள்ள நூல்களை வாங்கிச் சேமித்துள்ளது. இந் நூல் நிலையத்தை ஒரு தனிப்பட்ட ஸ்தாபனமாக இயங்கச்செய்ய வேண்டுமென்பதே இச்சபையின் குறிக்கோளாகும். ஆயின் இந்த நூல் நிலையத்தை மக்கள் அனுசரித்து நல்லாதரவு அளிக்காமையையிட்டுச் சபை பெரிதும் கவலைகொண்டுள்ளது. கல்வி கலாச்சார அபிவிருத்தியை இப்பகுதி மக்களிடையே வளர்க்கச் செய்துள்ள இந்த நற்பணிக்கு நல்ல ஆதரவு அளிக்கும்படி பொதுமக்கள் அனைவரையும் இச்சபை தயவுடன் வேண்டி நிற்கின்றது.

இ. முத்தமிழில் இரு பெரும் பிரிவான இசைக்கலை, நாடகக்கலை ஆகியவை வளர்ச்சி குன்றிய நிலையிலிருந்தும் விடுதலை அடைவதற்கு வசதியளிக்கும் வகையில் இசைக்கலை நாடகக் கலைகளை அரங்கேற்றம் செய்வதற்கு வாய்ப்பான ஓர் திறந்த வெளியரங்குக் கட்டிடத்தை இச்சபை ரூபா 24378/62 செலவிட்டுக் கட்டி முடித்துள்ளது. இத்தொகையில் ரூபா 20,250/- மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ள நன்கொடைப் பணமாகும். இக் கட்டிடத்துக்குப் பொருத்தப்பட்டுள்ள ரூ. 1500/- செலவில் அமைந்த இரு ஓடும் கதவுகளும், சின்னத்துரை பிறதேஸ் ஸ்தாபனம் உரிமைப்பங்காளர் திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சின்னத்துரை அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இத் திறந்த வெளியரங்கு கடந்த 22-3-67இல் கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு வைபவத்தை அடுத்த நான்கு நாட்களிலும் பல துறைப்பட்ட இசைக்கலை நிகழ்ச்சிகளும் நாடகக்கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத் திகதி தொடக்கம் ஒவ்வோர் மாதத்து பௌர்ணிமைத் தினங்களிலும் இசைக்கலை, நாடகக் கலை நிகழ்ச்சிகளை இலவசமாக நடத்திவருகின்றது. இக் கலைவளர்ச்சிப் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு ஒரு கணிசமான தொகையை நன் கொடையாக வழங்கும்படி இப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஊடாகவும், யாழ் பிரதேச கலாமன்றத் தலைவரும், யாழ்மாவட்ட அரசாங்க அதிபரும், சிறந்த கலாரசிகருமான திரு. வேணன் அபயசேகரா அவர்கட்கு ஊடாகவும் கலாச்சார இலாகாவை இச் சபை வேண்டியுள்ளது. ஆயின் எமது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது மிகவும் விசனத்துக்கு இடமானது. இந்த இலாகாவுக்குப் பொறுப்பாகவுள்ள மந்திரி அவர்கள் எமது வேண்டுகோளைப் புறக்கணித்ததில் வியப்பெதுவுமில்லையென்று நான் கருதுகிறேன்.

ஈ. அன்றியும் விளையாட்டுத்துறையிலும் இக்கிராமசபைப் பிரதேச மக்கட்கு உதவியளிக்க வேண்டுமென ஆர்வம்கொண்ட இச்சபை மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள திறந்வெளியரங்கு முன்திடலிலும் இணுவில் சந்தை மைதானத்தின் ஒரு பகுதியிலுமாக இரு பொதுவிளையாட்டு அரங்குகளை நிறுவியும் வேண்டிய விளையாட்டு உபகரணங்களை வாங்கி உபகரித்தும் உள்ளது. இத்துறையில் பெரும்பாலும் இளைஞர்கள் ஊக்கம் அளிக்காமையால் இச்சேவையைத் தொடர்ந்து நடத்தவும் வேண்டிய நிதியுதவிகளைத் தேசிய விளையாட்டு இலாகாவிடமிருந்து பெறவும் உரிய வாய்ப்புக்களை இச்சபை இழந்துநிற்கின்றதுஎன்பதனைத் துன்பத்துடன் இங்கு குறிப்பிட வேண்டியவனாகின்றேன்.

9. மின்சார சேவை:

இச்சபையின் ஒரு பகுதி 1964இல் சுன்னாகம் பட்டினசபையாகப் பிரிக்கப்பட்டதும் இச்சபை நிர்வாகப் பிரதேசத்தின் கீழ் 194 மின்சார வாடிக்கைகாரர்களே அடங்கினர். இத்தொகையினரைவிட எமக்குச் சொந்தமான உப மின் நிலையத்திலிருந்து உடுவில் மானிப்பாய் வீதியில் நிறுவப்பட்டுள்ள எமது மின் லையின் மூலம் மின்சாரத்தை உபயோகித்துவரும் பட்டினசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லேக்குள் அடங்கிய 38 மின் வாடிக்கையாளரும் எமது மின் சாரச் சேவைக்குள் விடப்பட்டனர். இந்த 232 மின் வாடிக்கைகாரர்களிட மிருந்தும் எமது சபைக்குக் கிடைத்த வருமானம் மின்சார சேவை நிர்வாகத்தைக் கொண்டு நடத்த பற்ருக்குறையாக இருந்தமையின் மின்சார சேவையால் வருடாவருடம் ரூபா 10,000/ வரையில் நஷ்டம் அடைந்துகொண்டே வந்தது. அத்துடன் எமது பிரதேசத்தில் அடங்கிய மின்சார சேவை இணைப்புகள்யாவும்முதன்முதல் மின்சார சேவையை 1951இல் ஆரம்பித்த காலத்தில் அமைக்கப்பட்டனவாதலின் சிற்சில இடங்களில் மின்இடு கம்பிகளை மாற்றியமைக்கவும் சில மின் சேவை இணைப்புக்களை முற்ற முழுக்கத் திருத்தியமைக்கவும் வேண்டி ஏற்பட்டது. அங்ஙனம் சீர்திருத்தம் செய்யாதொழியின் எமது நிர்வாகத்தின் கீழிருந்த 232 மின் வாடிக்கைகாரர்கட்கும் திருப்தியளிக்கத் தகுந்த வகையில் சேவை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. இச் சீர்திருத்தத்திற்கு கடந்த நான்கு வருடங்களிலும் ஏறக்குறைய ரூ. 12,000 வரை செலவிட்டுள்ளோம். இத்துடன் நின்றுவிடின் மின் சார சேவையால் ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிப்படுத்த முடியாதென இச்சபை கருத்திற்கெடுத்து மின்சாரசேவை விஸ்தரிப்புக்களைச் செய்யவேண்டுமென முடிவு செய்துள்ளது. சபையின் தீர்மானத்தை அனுசரித்து பின்காணும் மின் சேவை விஸ்தரிப்புக்கள் அவ்வப்பெயருக்கெதிரே குறிக்கும் செலவில் விஸ்தரிப்புச் செய்யப்பட்டன.

சங்குவேலி மின் விஸ்தரிப்பு ரூ. 1516**8**-50
மல்வம்தெரு மின் விஸ்தரிப்பு ரூ. 1590-70
தாவடிச் சுடலை ஒழுங்கை மின் விஸ்தரிப்பு ரூ. 8238-20
(திருத்தவேலை உட்பட)
செட்டிவளவு ஒழுங்கை மின் விஸ்தரிப்பு ரூ. 5395-85
சிவகாமி அம்மன் கோவில் ஒழுங்கை மின் விஸ்தரிப்பு ரூ. 1668-10
மாரிதோட்டம் ஒழுங்கை மின் விஸ்தரிப்பு ரூ. 1606-40
இணுவில் மானிப்பாய் வீதி மின் விஸ்தரிப்பு ரூ. 1399-50

ஆகவே, மின்சார சேவை விஸ்தரிப்புக்கு மொத்தமாக இச் சபை பொதுநிதியிலிருந்து ரூபா 35067/25 செலவிட்டுள்ளது. அங்ஙனம் மின்சார சேவை விஸ்தரிப்புக்குச் சபை தனது பொதுநிதியிலிருந்துசெலவிடல் மின்சாரச் சட்ட விதிகளுக்கு முரண்பட்ட செய்கையாக அமைந்ததெனினும் மின்சேவையால் வருடாவருடம் சபை அடைந்துவந்த நஷ்டத்தைப் பாதுகாக்க வேறு மாற்றுவழி எதனையும் மேற்கொள்ள முடியாத நிலைமையிலேயே இந்தக் குறுக்குவழியைக் கையாள வேண்டி நேரிட்டது.

மின்சாரசேவை விஸ்தரிப்புகள் அநேகமாக மத்திய அரசாங்கத்தின் உள்ளூர்க்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி நிதியிலிருந்து பெறும் கடன் பணத்திலேயே அமைக்கப்பட வேண்டுவது நியதி. ஆயின் அவ்வழியைச் சபை கைக்கொள்வதற்குச் சபைப் பிரதேசத்தில் இறை மதிப்புவரி அமுலில் இருப்பின் மாத்திரம் கடன்கொடுக்க முடியுமென உள்ளூராட்சி ஆணையாளர் அறுதியிட்டுக் கூறியுள்ளார். இறைமதிப்பு வரியை அமுலுக்குக் கொண்டுவர இச் சபை முனைந்த தெனினும் பொதுமக்களாகிய நீங்கள் இவ் வரி விதிப்பை முழுப்பலத்துடன் எதிர்த்தீர்கள். எனவே தான் சபையின் பொது வருமானத்தை இச்சேவைக்கு முடக்க நேரிட்டது. அதனால் சபை செய்யவேண்டிய அநேக நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கைவிடப்பட்டன. இதனால் பொதுமக்கள் எம்மீது குறை காண முன்வரமாட்டார்கள் என்பதே எனது உறுதியான நிம்பிக்கை.

இன்றைய திகதிவரை எமது சபையின்கீழ் உள்ள மின் வாடிக்கைகாரரின் எண்ணிக்கை 470. இத்தொகையினரில் பட்டினசபை எல்லைக்குள் வசிக்கும் எமது மின் நிருவாகத்தின்கீழ் உள்ள மின் வாடிக்கைகாரரின் எண்ணிக்கை 38ம் நீங்கவேண்டிய நிலைமை நேரிடினும் எமது மின்சார சேவை பூரணபலன் அளிக்கும் ஓர் மின் சேவைத் திட்டமாக நாம் அமைத்துக் கொண்டுள்ளோம் என இங்கு நான் கூறிவைப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

10. பொதுச் சேவை :

அ. வலிகாமம் வடக்கு காரியாதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் காங்கேசன்துறைப் பட்டினசபை, சுன்னகம் பட்டினசபை ஆகிய இரு பட்டினசபைகளும் தெல்லிப்பழை, மயிலிட்டி, ஏழாலை, மல்லாகம், உடுவில் ஆகிய ஐந்து கிராமசபைகளும் அடங்கியுள்ளன. தற்போதுள்ள காரியாதிகாரி பிரிவை வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு என இரண்டு காரியாதிகாரிப் பிரிவுகளாகப் பிரித்து அமைக்கும்படி இச் சபை உள்நாட்டு அமைச்சுக்குக் கோரிக்கை விடுத்து, அதற்கான சகல ஒத்துழைப்பையும் அளித்து வருகிறது.

ஆ. மேலும் இக்கிராமசபைப் பிரதேசத்தோடு அடங்கிய உடுவில், இணுவில் ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளையும் இணுவில், தாவடி, உடுவில் வடக்கு, உடுவில் தெற்கு என நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளாகத் தொகுத்தமைக்கும்படியும் இச் சபை உள்நாட்டு அமைச்சரை வேண்டிக்கொண்டதுமன்றி அக் கோரிக்கை செயல்படத் தம் மாலான சகல ஒத்துழைப்பையும் கொடுத்து வருகிறது. மேலே சொல்லப்பட்ட இப்பிரிவினைகள் செயல்படும் நிலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகி, தேவையான சகல அறிக்கைகளையும் உள்நாட்டு அமைச்சுப் பெற்றுக்கொண்டுள்ளது. எமது பிரதேச நிர்வாக முன்னேற்றத்திற்கு வழிகோலும் மேற்காட்டிய இரு பிரிவினைகளுக்கும் பரிபூரணமான ஆதரவு அளிக்கும்படி பொதுமக்களாகிய தங்கள் அனைவரையும் அன்புடனும் பணிவுடனும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இ. அண்மையில் எமது சபை நிர்வாகத்தில் இருந்து பிரிந்து ஓர் தனி உள்ளூராட்சிச் சபையாக அமைந்துள்ள சுன்னுகம் பட்டினசபை இன்னும் சில ஆண்டுகளில் நகரசபை அந்தஸ்தைப் பெறும் நிலைமை நேரிடுமிடத்து பட்டினசபைப் பிரதேசமாக அமைந்துள்ள பகுதி அத்தகைய நகரசபை அந்தஸ்தைப் பெறுவதற்கு விசாலம் போதாதிருக்கும் ஆதலின், எல்லைகளில் உள்ள மல்லாகம், உடுவில், ஏழாலை ஆகிய கிராம சபைப் பிரதேசத்துடன் முன்னேற்றமடைந்துள்ள சில பகுதிகள் உத்தேச சுன்னுகம் நகரசபையின் ஆக்கிரமிப்புக்கு ஆளாக நேரிடும். உடுவில் கிராமசபைப் பிரதேசத்துள் அத்தகைய ஆக்கிரமிப்புச் செய்ய நேரிடின் ஆக்கிரமிப்புக்கு எஞ்சக்கூடிய பகுதிகள் ஓர் தனிக் கிராம சபையாக இயங்கமுடியாது போகவே அயலில் உள்ள கொக்குவில் கிராம சபை, மானிப்பாய் கிராம சபை ஆகியவைகளோடு ஆக்கிரமிப்புக்கு எஞ்சிய பகுதிகளைப் பிரித்துச் சேர்த்துவிட்டு உடுவில் கிராம சபையின் பெயர் முற்ற முழுக்க அமுக்கப்பட்டுவிடும்.

ஆகவே, எமது கிராமசபையை எதிர்நோக்கும் இந்த உத்தேச ஆக்கிரமிப்பு அபாயத்திலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது அவசியம். எனவேதான் நாம் தற்போதுள்ள உடுவில் கிராம சபைப் பிரதேசம் அனைத்தையும் ஓர் பட்டின சபையின் அந்தஸ்துக்குத் தரம் உயர்த்தும்படி கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்களைக் கடந்த ஒரு வருடமாகக் கோரி வருகிறோம். எமது தீர்க்க தரிசனத்தின் நன்மை தீமைகளை நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து வருங்காலத்தில் அமையப்போகும் சபை எமது ஆலோசனையைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும் என்பதே எமது பேரவா.

11. சமுகசேவைப் பணி :

கடந்த ஆண்டு டிசெம்பரில் ஏற்பட்ட பெருவெள்ளம் புயற்காற்றின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது சபையுந் தன்னுலான உதவியை நிறைவேற்றிவைக்கத் தயங்கவில்லை எனக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். வெள்ளத்தால் மிக மிகப் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் உதவி கிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் முதலுதவியாக எமது சட்ட வரையறைக்கு உட்பட்ட அளவில் ஒரு சிறு தொகையான ரூபா 700/61 ஐச் செலவிட்டு பாண், தேயிலை, சீனி, கிழங்கு ஆகிய உணவுப் பொருட்களை வாங்கிக் குடிபெயர்ந்து ஒதுக்கிடத்தில் தஞ்சம் புகுந்தவர்களுக்கு உதவியுள்ளோம். இச்சேவைக்கு மிக மிகச் சிறிய தொகையே செலவிடப்பட்டதெனினும் வேண்டிய நேரத்தில் செய்யப்பட்ட இந்த உதவியினைப் பொதுமக்கள் மலையளவாக மதித்துப்போற்றுவர் என்பதே எமது உள்ளத் துணிபு.

12. அங்கத்தவர்களும் கூட்ட ஒழுங்குகளும்:

இச்சபை கடந்த நான்கு ஆண்டு காலத்திலும் ஏறக்குறைய 72 பொதுக்கூட்டங்களை நடாத்தியுள்ளது. சொல்லப்பட்ட காலங்களில் நடந்த 72 கூட்டங்களிலும் ஒரு கூட்டமேனும் அங்கத்தவர்களின் நிறைவெண்குழு வரவு இன்மையால் பின்போடப்பட்டேனும் அல்லது ஒத்திவைக்கப்பட்டேனும் இருக்கவில்லை என்பது பற்றி இங்கு குறிப்பிடுவதில் பெருமைப்படுகிறேன்.

அன்றியும் சொல்லப்பட்ட கூட்டங்களில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் ஓர்இரு தீர்மானங்கள் தவிர ஏனையவை அனைத்தும் கூட்டத்தில் சமூகமளித்த அங்கத்தவர்கள் அனைவராலும் ஏகமனதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளன எனக் கூறுவதில் மேலும் பெருமையடைகின்றேன்.

பலவேறுபட்ட அரசியல் கருத்துள்ளவர்கள் இச்சபை அங்கத்தவர்களாக இருந்தும் இச்சபை எடுத்தாண்ட தீர்மானங்கள் எதற்கும் தம்மைத் தாம் கொண்டுள்ள அரசியல் கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் அப்பால் இருத்தியே இக் கிராமசபை அங்கத்துவப் பணியை மேற்கொண்டனர் எனக் கூறுவது மகிழ்ச்சியளிக்கத்தக்க விஷயமல்லவா?

அவ்வாறே இக் கிராமசபை வட்டாரங்கள் அனைத்தினது சீர்திருத்த வேலைகளும் எத்தகைய அரசியல் கருத்துவேறுபாடுகளுக்கும் இலக்காகாது சமத்துவமான அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன என மகிழ்ச்சியுடன் கூறிவைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இச்சபை மேற்கொண்ட விடயங்கள் அனைத்துக்கும் தமது பேராதரவையும் ஒத்துழைப்பையும் அளித்துவந்த இச்சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் அக்கிராசனராகிய நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அன்றியும் கடந்த நான்கு வருடங்களிலும் இச்சபையின் ஏகோபித்த சம்மதத்தினுல் உப அக்கிராசனர்களாக முறையே தெரிவுசெய்யப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்
வரவுப் பதிவு எண்
வகுப்பு எண்




இச்சபையின் தற்போதைய அங்கத்தவர்களும் உத்தியோகத்தர்களும் அடங்கிய படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர்கள் வீ. சீராளசிங்கம், செ. இராசதுரை, ம. குமாரலிங்கம், இ. பொன்னம்பலம், நா. சின்னத்துரை ஆகியோர் தத்தமது உப அக்கிராசனர் பதவிக்காலத்தில் எமக்கு அளித்துவந்த ஒத்துழைப்புக்கும் ஆலோசனைக்கும் நான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அமைச்சர்கள் விஜயம்:

கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்கட்கு 15-4-65இல் எமது கிராம சபை ஒரு பொது வரவேற்பளித்துக் கௌரவித்தது. கௌரவ அரசாங்கஅமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் எமது கிராம சபைப் பிரதேசத்துக்குக் கொடுத்த விஜயத்தின்போது இச்சபை அவருக்கு ஒரு பொது வரவேற்பு அளித்துக் கௌரவித்தது. காணி நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. சீ. பீ. டீ. சில்வா அவர்களும், சுகாதார அமைச்சர் திரு. எம். டீ. ஏச். ஜெயவர்த்தன அவர்களும் எமது கிராம சபைக்கும் சபைப் பிரதேசத்துக்கும் விஜயம் செய்தனூன்று சபை பொது வரவேற்பளித்து அவர்களைக் கௌரவித்தது. கடந்த 5-12-67 ஆந் திகதியன்று பிரதம மந்திரி கௌரவ திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் எமது சபைப்பிரதேசத்துக்கு ஊடாக யாழ்ப்பாண மாநகரசபை நிறுவும் நவீன சந்தைக்கு அத்திவாரக்கல் நாட்டுவிழா வைபவத்திற்குச் சென்றபொழுது இச்சபை இணுவிலில் வைத்து அன்னாருக்கு ஓர் பொது வரவேற்பு அளித்துக் கௌரவித்தது. இச்சபை மக்கள் சார்பில் கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. அவர்களுக்கும். பிரதம மந்திரி கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்களுக்கும் அளித்த பொது வரவேற்பின்போது வாசித்தளித்த வரவேற்பு மடல்களைப் பிறிது பக்கங்களில் காண்க.

தொகுப்பு:

எமதுசபை கடந்த நான்கு ஆண்டு காலங்களிலும் எதனைச் சாதித்துள்ளது எனக் கேட்கும் பொதுமக்கள் சிலரும் எமது மத்தியில் இருக்கத்தான் செய்வார்கள். எனவே எமது சபையின் சாதனைகளில் குறிப்பிடத்தக்க சில முக்கியமான அம்சங்கள் இதனடியில் சுருக்கித் தரப்படுகின்றன.

அ. கடந்த நான்கு வருடங்களிலும் கிராமத் தெருக்கள் கிணறுகள் அமைப்புக்கும் மருதனார்மடம் சந்தைக்கட்டிட அமைப்புக்கும் பொது நூல் நிலையத்துக்கும் திறந்த வெளியரங்குக் கட்டிடத்துக்குமாக மொத்தம் ரூ. 91,892/50ஐ மத்திய அரசாங்கத்திடமிருந்து நன்கொடைகளாக இச்சபை பெற்றுள்ளது.

ஆ. கிரமத் தெரு அமைப்பதற்கும் திறந்தவெளியரங்குக் கட்டிட அமைப்புக்குமாக இக்கிராம சபைப் பிரதேசத்துக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிக்கும் பணம்படைத்த சில கொடைவள்ளல்களிட மிருந்து அன்பளிப்பு நன்கொடையாக ஏறக்குறைய ரூபா 10,000/- பெற்றுள்ளது.

இ. இச்சபை தமது நிர்வாகத்தைக் கையேற்கும்போது 194 என்ற எண்ணிக்கையைக் கொண்டுள்ள மின்சார வாடிக்கைகாரரின் எண்ணிக்கையை வருடத்துக்குச் சராசரி 60 புதிய மின் வாடிக்கைகாரரைச் சேர்த்து தன் அபார திறமையை நிலை நாட்டியுள்ளது.

ஈ. 1964, 1965, 1966ஆம் நிதியாண்டுகளில் சராசரி ரூபா 10,000/- க்குக் குறையாத நட்டம் அடைந்துகொண்டு வந்த மின்சார சேவைக்கு சட்டவிதிகளைப் பொருட்படுத்தாது பொது நிதியிலிருந்து சுமார் ரூபா 47000/-வரை செலவிட்டு மின் சேவை லைன்களை விஸ்தரிப்புச் செய்தமையின் 1967ம் நிதியாண்டில் மின் நஷ்டத்தை ஈடு செய்துள்ளது மன்றி அவ்வாண்டில் ஏறக்குறைய ரூபா 2000/- ஆதாயமும் கண்டுள்ளது.

உ. இச்சபை 1967ஆம் ஆண்டில் ரூ. 24378/62 கட்டி முடித்துத் திறப்புவிழா செய்துள்ள திறந்த வெளியரங்குக் கட்டிடத்துக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து ரூ. 20,250/- நன்கொடையாகவும் தனிப்பட்டவர்களிட மிருந்து அன்பளிப்பு நன்கொடையாக ரூ. 1500/ம் பெற்றுள்ளது. (குறிப்பு: சபை பொது நிதியில் ரூ.2628/62 மாத்திரம் செலவிட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


பாராட்டுக்கள்

1. இச்சபை தன் நிர்வாகத்தைத் திறம்படச் செய்து முடித்ததற்கு வேண்டிய உதவிகளையும் உபதேசங்களையும், அவ்வப்போது உதவிய யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர் அவர்கட்கும், உள்ளூராட்சி அமைச்சின் யாழ்ப்பாணக் கிளைத் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இச்சபை தனது மனமார்ந்த நன்றியைச் செலுத்திக்கொள்ளுகிறது.


2. இக்கிராமசபையின் ஆக்க வேலைகளுக்கும் வருமான வளர்ச்சிக்கும் வழிகாட்டிகளாக இருந்து இப் பகுதிச் சமுதாய முன்னேற்றம் கருதி இச் சபையுடன் ஒத்துழைத்து தத்தம் கடமையை தண்ணளியுடனும், ஆர்வத்துடனும், கீழ்ப்படிவுடனும், நேர்மையுடனும் செய்துவரும் இச்சபைக் காரியதரிசி, இலிகிதர், ஓவசியர், மின்முகாரி, ஆயுர்வேத வைத்தியர் ஆகிய உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் இச் சபை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

இந்த அறிக்கையில் காணும் ''குற்றங்களைந்து குணம் அளைந்துகொள்ளுதல்'' பொது மக்களாகிய தங்கள் கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திறந்த வெளிஅரங்குத் திறப்புவிழா வைபவத்தின் பின்னர் கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய பிரமுகர்களுக்கும் இச்சபை அளித்த மதியபோசன விருந்தின்போது எடுக்கப்பட்ட படம்.



திறந்த வெளிஅரங்குத் திறப்புவிழா வைபவத்தின் பின்னர் கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்களும், பாராளுமன்றப் பிரதிநிதிகளும், மற்றும் பிரமுகர்களும் சமுகமாக இருந்து கலந்துரையாடும்பொழுது எடுக்கப்பட்டுள்ள படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. வருமானங்களும் செலவுகளும்:

*1964 தொடக்கம் 1967 முடியவுள்ள கடந்த நான்கு வருடங்களிலும் இச் சபை ஈட்டியுள்ள வருமானங்களும் செய்துள்ள செலவுகளும் பற்றிய ஒரு விபரம் இதன்கீழே நிரைப்படுத்தித் தரப்பட்டுள்ளது.*

| வருமானங்கள் | 1964 | 1965 | 1966 | 1967 |
|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. தலைவரி | 2145-77 | 585-21 | 877-80 | 877-80 |
| 2. பொதுநன்கொடை | 6559-00 | 5721-00 | 14077-00 | 14077-00 |
| 3. வண்டில் வாகன வரி | 1022-00 | 942-50 | 940-00 | 1318-00 |
| 4. குற்றப்பணம் | 107-00 | 20-50 | 88-00 | 43-00 |
| 5. களியாட்டு வரி | 3650-60 | 3905-00 | 5282-30 | 4637-60 |
| 6. நாணுவிதம் | 766-28 | 911-36 | 1239-10 | 2081-40 |
| 7. முத்திரைத் தீர்வைகள் | 1547-91 | 4206-00 | 4140-00 | 4044-00 |
| 8. நிலம் கட்டிட வாடகை | — — | — — | — — | 300-00 |
| 9. வியாபார லைசென்ஸ் வரி முதலியன | 4123-50 | 4037-00 | 4271-50 | 4453-50 |
| 10. ஆயுள்வேத நன்கொடை | 3670-00 | 3810-00 | 3370-00 | 5875-00 |
| 11. சந்தைவரி | 6523-00 | 13469-88 | 13882-25 | 15856-05 |
| 12. மின்சாரக் கட்டணம் | 72356-52 | 91985-53 | 92522-06 | 114419-75 |
| 13. மின்சாரக் கட்டணம் பாக்கி | 71130-84 | — — | — — | — — |
| 14. வா. படி. வி. வா. படி. நன்கொடை | 37545-36 | 21686-98 | 18176-87 | 24778-38 |
| | 211,147-78 | 151,280-96 | 158,867-18 | 192,761-48 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செலவுகள் : | 1964 | 1965 | 1966 | 1967 |
|---|---|---|---|---|
| 1. கந்தோர் நிர்வாகம் | 18415-28 | 18606-85 | 16459-89 | 18168-99 |
| 2. தெருக்கள் பரிபாலனம் | 13595-33 | 9415-31 | 8171-82 | 9145-80 |
| 3. நிலம் கட்டிட பரிபாலனம் | 1858-75 | 2259-90 | 3242-41 | 4071-32 |
| 4. மாவுணவு பகிர்தல் | 2002-95 | 1926-15 | 1225-00 | 1859-31 |
| 5. நகரச் சுத்திகரிப்பு | 2583-83 | 2253-83 | 2043-73 | 1926-83 |
| 6. நீர் வசதியளித்தல் | — — | — — | — — | — — |
| 7. ஆயுள் வேத சேவை | 1475-30 | 1439-58 | 6854-21 | 7113-60 |
| 8. சந்தை பரிபாலனம் | 1638-35 | 2202-66 | 2224-05 | 7154-00 |
| 9. இடுகாடுகள், சுடுகாடுகள் பரிபாலனம் | 198-00 | 82-95 | — — | 2188-00 |
| 10. கல்வி கலாச்சார சேவை | 50-00 | — — | — — | 2411-20 |
| 11. வா. ப. வி. வா. படி | 28199-11 | 21223-93 | 23947-26 | 24639-81 |
| 12. மின்சார சேவை | 110709-42 | 81869-74 | 108411-01 | 120710-67 |
| 13. பட்டினசபைக்குக் கொடுத்த பங்கீட்டு பணம் | 69543-72 | — — | — — | — — |
| 14. விவசாய அபிவிருத்தி சேவை | — — | — — | — — | 808-61 |
| | 250270-04 | 141280-90 | 172579-38 | 200198-14 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச்சபை கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், கியூ. சீ. அவர்களுக்கு 15-4-65இல் ஒரு பொது வரவேற்பளித்துக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தேசிய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சரும்,

பாராளுமன்ற மேற்சபை உறுப்பினருமாகிய

# கௌரவ திரு. மு. திருச்செல்வம், கியூ. சி.

அவர்களுக்கு

## உடுவிற் கிராமசபைத் தலைவரும் உறுப்பினர்களும்

மனமுவந்தளித்த

# வரவேற்பு வாழ்த்துரை

**தமிழ்த்தாயின் தவப்புதல்வ !**

சிந்தையினிக்கும் செந்தமிழைக் காக்கப் பல்லாண்டுகளாக அரும் பெரும் சேவைகளும் அரிய பல தியாகங்களும் புரிந்து, இன்றும் அதே நோக்குடன் பிரதமர் கௌரவ திரு. டட்லி சேனநாயகா அவர்களின் அழைப்பிற்கிணங்கித் தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் உள்ளூ ராட்சி அமைச்சராகப் பதவியேற்றுச் சகல இனத்தவர்க்கும் சமநீதி என்னும் உன்னத அடிப்படையில், நாட்டிற்குப் பணியாற்றத் தாங்கள் முன்வந்ததை நினைந்து, நினைந்து பேருவகை எய்துகின்றோம்.

**தமிழினத்தின் காவல !**

சரித்திரமறியாக் காலந்தொட்டு இந் நாட்டில் வாழ்ந்து மொழி யிலும் பல வழியிலும் தனிப்பெருமை பெற்ற தமிழினம், பிளவுபட்டு அளப்பரிய இன்னல்களுக்கு ஆளாகிவந்த நேரத்தில் என்றும் நாம் கண்டிராத ஒற்றுமையை நிலைநாட்டி உண்மை நிலையை எடுத்துணர்த்தி மேலும் மேலும் அழிவுப்பாதையில் தீர்க்கதரிசனமற்ற தலைவர்களால் இழுத்துச்செல்லப்படாது பாதுகாத்து வாழ்வளிக்க வழிவகுத்த தமிழரசுத் தந்தையின் தொண்டர் கூட்டத்தில் தலையாய தலைவனாய், தேசிய அமைச்சரவையின் தனிப்பெரும் தமிழ்ப்பிரதிநிதியாய் இன்று தாங்கள் திகழும் திறல்கண்டு வியந்து மகிழ்கின்றோம்.

**ஜனநாயகத்தின் பாதுகாவல !**

மனித சுதந்திரத்தின் மாண்பினை எடுத்தோதும் அரசியற் கொள்கை களின் உயிர்நாடி என விளங்கும் ஜனநாயக ஆட்சியைப் பாதுகாக்க நாட்டின் சுதந்திரத்திற்காகப் பெரும்பான்மை இனமான சிங்களச் சகோதரர்களோடு தோளோடு தோள்நின்று போராடிய சேர் பொன். இராமநாதன் அவர்கள் போன்ற அரும் பெருந் தலைவர்கள் வழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று இன்று ஜனநாயகத்தையே காக்க முன்வந்த தங்கள் உன்னத முயற்சி இந்நாட்டின் சரித்திரத்தில் தமிழினத்திற்குத் தனியிடம் பெற்றுத் தரும் இனியதோர் முயற்சியன்றோ!

**புகழொடு தோன்றிய அண்ணலே!**

இன்னிசைக் கருவியாம் யாழின் பெயரினைத் தன் பெயராய்க் கொண்ட தன்னிகரில்லா யாழ்ப்பாண நாட்டில் நல்லவர் நிறைந்த வட்டுக்கோட்டையெனும் பல்வளம் நிறைந்த பழம்பெரும் பதியில் தோன்றிச் சட்டப் பயிற்சி பெற்று, நீதிபதியாகி நடுநிலை தவறாது வாதியும், பிரதிவாதியும் மகிழ்ந்து வணங்க ஓதிய தீர்ப்பை வியந்து, மகிழ்கின்றோம்.

பின், அரசாங்கத்தின் நீதி ஆலோசனைத்துறையின் சிரேஷ்ட நிபுணராய் 'சொலிசிற்றர் ஜெனறல்' எனும் உயர்பதவி வகித்து இராணி அத்துவக்காத்து எனும் கிடைத்தற்கரிய உயர்பட்டம் பெற்று இளைப்பாறி இன்று நாட்டின் சேவைக்காகத் தங்களை அர்ப்பணித்து உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும் பேதமின்றிக் குழந்தை உள்ளத்தோடு எவரிடத்தும் இனியவை பேசும் இன்சுவைத் திருவே!

**பல இன மக்கள் ஒற்றுமையை நிலைநாட்டிய பெரியோய்!**

இலங்கையில் வாழும் பல இன மக்களும் ஒற்றுமைப்பட்டு நல்வாழ்வு வாழத் தாங்கள் பல்லாண்டு செய்த முயற்சியன்றோ இன்று பலன் தந்து இன ஒற்றுமை அடிப்படையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. சேவைக்காகப் பதவியேற்ற தாங்கள் தமிழினத்திற்கும் நம் தாய்நாட்டிற்கும் மேலும் மேலும் சேவை பல செய்யப் பல்லாண்டு நல்வாழ்வைத் தங்களுக்கு ஈந்தருளவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இடையறாது வழுத்துகின்றோம்.

**திருச்செல்வமெனும் பெருஞ்செல்வப் பேரொளியே வாழ்க!**

*தங்கள் இன்முகத்தை என்றும் மறவாத*

**ச. முத்துலிங்கம்**
*தலைவர்*

**வீ. சீராளசிங்கம்**
*உப தலைவர்*

*15-4-65*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பிரதம அமைச்சர்

# உயர்திரு டட்லி சேனுநாயக்கா அவர்கள்

உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயஞ்செய்தனுான்று

உடுவில் கிராம சபை வரவேற்று வாசித்தளித்த

# உபசாரப் பத்திரம்

கௌரவ பிரதம அமைச்சர் அவர்களே!

எமது கிராம சபைப் பிரதேசத்துக்கூடாகத் தாங்கள் மனமுவந்து வருகை தந்தமைக்காக உடுவில் கிராம சபைப் பிரதேசத்தில் வதியும் மக்கள் சார்பில் வருக வருகவெனத் தங்களை வரவேற்பதிற் பெருமிதம் அடைகின்றேன்.

இலங்கை மாதாவின் ஆட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரின் கைக்கு மாறிய ஒன்பது வருட காலத்திலுஞ் சிதைவுற்றுக்கிடந்த தேசிய சமூகப்பிளவுகளை, தாங்கள் ஆட்சி அமைத்தபோது மீண்டும் ஒற்றுமைக்குக் கொண்டுவந்த தங்கள் பெருமையை எம்மாற் பாராட்டாமலிருக்க முடியாது.

ஜனநாயகத்தின் பாதுகாவலராகிய தாங்களும் தங்களைச் சார்ந்த கட்சியும், தமிழ்ப்பேசும் இனத்தை அடிமைகளாக மதிக்காது இலங்கை மாதா சுதந்திரம் பெற நடாத்திய போராட்டங்களில் சிங்கள மக்களோடு தமிழ் மக்களும் தோளோடு தோள்நின்று போராடிய உரிமை எமது இனத்துக்கும் சமமாகவுண்டு என்ற உண்மையைத் தங்கள் மனத்தில் இருத்தி எம்மினம் இழந்த உரிமைகளை, மீளப்பெறத் தாங்கள் தலைமை தாங்கியுள்ள ஆட்சி வழிவகுக்கும் என உறுதிபூண்டு தங்களை வரவேற்பதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பஞ்சசீல வழிநின்று அரசோச்சிய சுத்தோதன மன்னனின் தவப் புதல்வன் புத்தபிரான் காட்டிய தர்மநெறியைக் கடைப்பிடித்து வாழும் தாங்களும், தங்களோடு வருகை தந்துள்ள சக அமைச்சர்களும், அரசவைப் பிரதிநிதிகளும் எம்மின மக்கள் கொண்டுள்ள சமத்துவ அரசுரிமை வேட்கையைத் தங்கள் ஆட்சிக் காலத்திலே தீர்த்துவைப்பீர்க ளென்ற அசையா நம்பிக்கையுடனும் உறுதியுடனும் தங்கள் அனைவரையும் வரவேற்பதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"தன்பங்கு தாவென்ற தம்பியாகிய எம்மினமும்,
தம்பியோ டின்புற்று வாழாத் தமையனுகிய" தங்கள் இனமும்
வேற்றுமைப்பட்டு வாழும் அவல நிலைமை மீண்டும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமெனக் கேட்டுத் தங்களை வாழ்த்தி வரவேற்கின்றேன்.

வாழ்க! தமிழ் இனம். வாழ்க! தங்கள் ஆட்சி.

ச. முத்துலிங்கம்
அக்கிராசனர்
உடுவில் கிராம சபை

உடுவில்,
5-12-67.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# N. VAITILINGAM & CO. LTD.,

**COLOMBO — JAFFNA**

**Leading Importers, General Hardware Merchants, Engineers and Building Contractors.**

**CHEAPEST HOUSE FOR:**

**All kinds of Building Materials of Good Quality**

- Cartridges
- Dynamite
- Siemens Water Pump
- Estate Requisites etc. etc.

**WE ARE MANUFACTURERS OF:**

"Thorn" brand Barbed Wire, best in the market and high quality

**BRASS & IRON WOOD SCREWS.**

*Colombo office :*
**450, Old Moor Street,**
**COLOMBO 12.**
**T'Phone No. 2029 & 7143**

*Jaffna Office:*
**138, K. K. S. Road,**
**JAFFNA.**
**T'Phone No. 530**

*Work shop* :
**169, Power House Road,**
**JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயஞ் செய்யுங்கள் !.

# முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ்

(அரசாங்க மின்சார ஒப்பந்தகாரர்)

**6/8, ஸ்ரான்லி வீதி, :: யாழ்ப்பாணம்.**

**எம்மிடத்தில்**

எல்லாவிதமான மின்சார உபகரணங்களும்
மிக மலிவாகக் கிடைக்கும்

தொலை பேசி : **7110.** தந்தி : கறண்ட், யாழ்ப்பாணம்.

✳

*Visit :*

# MURUGAN ELECTRICAL STORES

**(Govt. Electrical Contractors)**

**6/8, STANLEY ROAD :: JAFFNA**

*(Everything in Electricals)*

**T'Phone : 7110.** **T'Gram : Current, Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALA MODERN INDUSTRIAL WORKS

## கலா நவீன கைத்தொழில் நிலையம்

காங்கேசன்துறை வீதி

கோண்டாவில்.

*

**மோட்டார் சயிக்கிள்,**

**நீரிறைக்கும் இயந்திரங்கள்**

முதலிய இயந்திர வகைகள்

குறித்த தவணைக்குள் திருத்திக் கொடுக்கப்படும்.

அத்துடன்

மின்சார வேலைகள்,

மின்சாரத்தால் ஓட்டும் வேலைகள்

செய்வதற்குச் சிறந்த இடம்

## ★ கலா ★

## நவீன கைத்தொழில் நிலையம்.

*

உரிமையாளர்: இ. நல்லையா

கே. கே. எஸ். ரோட் :: கோண்டாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூரோன் எலெக்ற்றிக்கல்ஸ்

(மின்சார ஒப்பந்தகாரர்)

★

எங்களிடம் எல்லாவகையான

★ மின்சார உபகரணங்களும்

★ எஸ்லோன், பீ. வீ. சீ. பைப்புகளும்

★ மின்சார தண்ணீர் பம்புகளும்

சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ றட்ஜ் சயிக்கிள் விநியோகஸ்தர்கள்

நம்பர் : 228, ஆஸ்பத்திரி வீதி,

டெலிபோன் நம்பர் : 7016 யாழ்ப்பாணம்.

★

# Newtone Electricals

(ELECTRICAL CONTRACTORS)

★

*For all your Requirements of :*

* ★ ELECTRICAL GOODS
* ★ CYCLE TYRES, CYCLE TUBES AND OTHER CYCLE ACCESSORIES
* ★ S - LON, P. V. C. PIPES & ACCESSORIES
* ★ ELECTRIC WATER PUMPS

VISIT

## NEWTONE ELECTRICALS

*Principal Dealers in:*

★ RUDGE CYCLES ★

228, HOSPITAL ROAD. JAFFNA

Phone: 7016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For all your requirements either Books
or
Printing Works

Contact

# Sri Lanka Book Depot
# &
# Printing Works

**234, K. K. S. ROAD**
**JAFFNA.**

**Dial: 569.**

**புதிய வெளியீடுகள்:**

1. இந்துசமயபாடம் —வித்துவான் க. வேந்தனார்
2. கம்பராமாயணம் (அயோத்தியா காண்டம்) —வித்துவான் க. வேந்தனார்
3. பாரதச்சுருக்கம் —ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
4. உடல்நலசாஸ்திரம் —சுந்தரமூர்த்தி கந்தப்பு
5. சுகாதாரதீபம் —அ. சொர்ணம்
6. குடியியலும் அரசாங்கமும் (1ஆம், 2ஆம், 3ஆம் பாகங்கள்) —அ. விசுவநாதன்
7. குடியியல் வினாவிடை —அ. விசுவநாதன்
8. குடியியல் (6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புக்களுக்குரியவை) —அ. விசுவநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தலைசிறந்த பீடித் தொழிலாளர்களினால்
திறமையுடனும் திருப்தியுடனும்
முதல் ரகப் புகையிலைகொண்டு தயாரிக்கும்

# 786 கல்கி பீடிகளும்

மற்றும்

பிரிட்டிஷ் (சிலோன்) கோப்பறேஷன் ஸ்தாபனத்தாரின்
சுவேந்திரா சோப், சந்தன சோப், ஹெக்ஸா குளோறபில்
சேர்ந்த நைட் அன் டே சோப், குக்ஸ் ஜோய்,
வைட் ஒயில் பைனேல்

**B. C. C. கோழித்தீன் முதலியனவும்**

மற்றும்

***பலசரக்குச் சாமான்களும்***

மலிவாகவும் நம்பிக்கையுடனும் பெற்றுக்கொள்ளலாம்.

★

# சி. சின்னத்துரை அன் பிரதர்

**39, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.**

டெலிபோன்: **284** — கிரும்: "கல்கி"

கிளை:

**79, மெஸஞ்சர் வீதி, கொழும்பு - 12**

டெலிபோன்: **78946**



சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு, உடுவில் கிராம சபைக்காக, அதன் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது.

ஈ427-3/68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org